**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.1/2024 ன் அசல் வழக்கு எண்.570/2022**

திருமதி. மல்லிகா

.... மனுதாரர் / 1ம் பிரதிவாதி

..எதிர்..

1. திருமதி. L. சாந்த குமாரி,
2. திருமதி. L. லிஷா பிரியா
3. திரு. சாலி தினகரன்

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவானது 22.01.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. A.R. ராஜா இளங்கோ மற்றும் D. ராஜா ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s. U. சந்தானம் மற்றும் G.K. தமிழரசன் ஆகியோர் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 6 பிரிவு 17ன் கீழ் மனுவில்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:56:38 +0530

குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் / 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். மனுதாரரர் /1–ஆம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து குறித்து வாதி 07.07.2022 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பினார், இறந்துபோன பொன்னுசாமி என்பவரால் ஆவண எண்.146/1997 மூலம் வாங்கப்பட்ட, சென்னை, அண்ணிக்கட்டுச்சேரி, காக்கஞ்சி தெரு, எண்.5/53 என்ற மற்றொரு சொத்து, 17.07.2022 அன்று அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. பி. லிங்கமூர்த்தி என்பவர் தனது சட்ட வாரிசுகளை விட்டுவிட்டு, 12.05.2021 அன்று உயில் எழுதாமல் இறந்துவிட்டதாக வாதிகள் ஒப்புக்கொண்டனர். தங்கள் அறிவிப்பில் கோரியபடி, அசையும் சொத்துக்களில் 1/5 பங்குக்கு வாதியினர் உரிமை பெற்றுள்ளனர். ஆனால், வழக்கில், வாதிகள் ஒரே ஒரு சொத்தை மட்டுமே சேர்த்து, பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட மற்றொரு சொத்தை விட்டுவிட்டனர். விடுபட்ட அந்தச் சொத்தைச் சேர்க்காமல், பிரிவினை வழக்கைத் திறம்பட தீர்மானிக்க முடியாது. அது ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும். எனவே, அசல் வழக்கில் பாகப்பிரிவினை முறையாக விசாரிப்பதற்காக, விடுபட்ட சொத்தை வழக்கு அட்டவணையில் மூன்றாவது அட்டவணையாகச் சேர்த்து, வழக்கு மனுவைத் திருத்துமாறு உத்தரவிட வேண்டும்.

G
BHUVANESWARI

Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.03.23
22:56:43 +0530

**3. எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :–**

சென்னை, அண்ணிக்கட்டுச்சேரி, காக்கஞ்சி தெரு, வீட்டு எண் 5/53–ல் உள்ள, இறந்த பொன்னுசாமி பெயரில் உள்ள மனு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கும், எதிர்மனுதாரர் / வாதிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை மற்றும் அதன் உரிமையாளர் யார் என்பது இவர்களுக்குத் தெரியாது. திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், சித்துக்காடு கிராமத்தில் உள்ள சர்வே எண்.151/2B மற்றும் சர்வே எண்.154/10–ல் உள்ள சொத்துக்களுக்காக பிரிவினை வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். 1 முதல் 5 பிரதிவாதிகள் மோசடியாக 6–ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக (ஆவண எண்.3153/2022) ஒரு பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளனர். அது செல்லாது மனுதாரர் / 1ம் பிரதிவாதியால் பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்ட சங்கதிகள் தெளிவற்றவை மற்றும் கற்பனையானவை. வழக்கு அட்டவணைச் சொத்து முதலில் இறந்த பொன்னுசாமியின் மனைவி திருமதி. கெஜம்மாளுக்குச் சொந்தமானது என்பதைத் தவிர, மற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் மறுக்கப்படுகின்றன. எதிர்மனுதாரர் / வாதி இந்த மனு தொந்தரவு தரக்கூடியதாகவும், முக்கிய உண்மைகளை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–**

இம்மனுவில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:56:47 +0530

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. பிரச்சனை:–

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவர். எதிர்மனுதாரர்கள் / வாதிகள் பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை உத்தரவு பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் / 1ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்து மனுதாரர் /1–ஆம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து குறித்து வாதி 07.07.2022 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பினார், இறந்துபோன பொன்னுசாமி என்பவரால் ஆவண எண்.146/1997 மூலம் வாங்கப்பட்ட, சென்னை, அண்ணிக்கட்டுச்சேரி, காக்கஞ்சி தெரு, எண்.5/53 என்ற மற்றொரு சொத்து, 17.07.2022 அன்று அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் பி. லிங்கமூர்த்தி என்பவர் தனது சட்ட வாரிசுகளை விட்டுவிட்டு, 12.05.2021 அன்று உயில் எழுதாமல் இறந்துவிட்டதாக வாதிகள் ஒப்புக்கொண்டனர். தங்கள் அறிவிப்பில் கோரியபடி, அசையும் சொத்துக்களில் 1/5 பங்குக்கு வாதியினர் உரிமை பெற்றுள்ளதாகவும், ஆனால், வழக்கில், வாதிகள் ஒரே ஒரு சொத்தை மட்டுமே சேர்த்து, பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட மற்றொரு சொத்தை விட்டுவிட்டதாகவும், விடுபட்ட அந்தச் சொத்தைச் சேர்க்காமல், பிரிவினை வழக்கைத் திறம்பட தீர்மானிக்க முடியாது அது ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும் என்றும் எனவே, அசல் வழக்கில் பாகப்பிரிவினை முறையாக

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:56:52 +0530

விசாரிப்பதற்காக, விடுபட்ட சொத்தை வழக்கு அட்டவணையில் மூன்றாவது அட்டவணையாகச் சேர்த்து, வழக்கு மனுவைத் திருத்துமாறு உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு சென்னை, அண்ணாநகர், அண்ணிக்கட்டுச்சேரி, காக்கஞ்சி தெரு, வீட்டு எண்.5/53–ல் உள்ள, இறந்த பொன்னுசாமி பெயரில் உள்ள மனு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும், எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும் அதன் உரிமையாளர் யார் என்பது இவர்களுக்குத் தெரியாது என்றும் வழக்கு அட்டவணைச் சொத்து முதலில் இறந்த பொன்னுசாமியின் மனைவி திருமதி. கெஜம்மாளுக்குச் சொந்தமானது என்பதைத் தவிர, மற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் மறுக்கப்படுவதாகவும் எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தமது வாதங்களுக்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்து உறுதியூட்டப்படவில்லை. எனவே மனுதாரர் / 1ம் பிரதிவாதி மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு உத்தரவிடக் கோரிய இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:56:57 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:57:02 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.23 22:57:08 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>**
**இ.ம.எண்.1/2024 ன்**
**அசல் வழக்கு எண்.570/2022**
**நாள் 12.03.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**